International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20-3 July - September 2026

Published on 14, Jul - Sep 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# தொ.பரமசிவன் ஆய்வில் தமிழர் பண்பாடு

**கு.குமாரி**
முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் கோ.குணசேகர்**
இணைப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, விழுப்புரம் 605602

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் ஆய்வு உலகில் தனித்தன்மை மிக்கவர். அடித்தட்டு மக்களின் வாழ்வியலை ஆய்வு செய்தவர் பேராசிரியர் தொ.பரமசிவன். எளிய மக்களின் பண்பாட்டுக் கூறுகளே தமிழரின் பண்பாட்டு அடையாளங்கள் என்பதனைத் தன் ஆய்வின் மூலம் எடுத்து கூறியவர். தொ.பரமசிவன் அவர்களின் பண்பாட்டு ஆய்வு என்பது மிக முக்கியமானதாகும். அவரின் தமிழர் பண்பாட்டு ஆய்வுச்சிந்தனைகளை எடுத்துக் கூறுவதே இவ்வாய்வுக் கட்டுரையாகும்.

**முன்னுரை**

தமிழரின் சிறப்பையும் மேன்மையையும் எடுத்துரைப்பவையாகத் தமிழ் இலக்கியங்கள் காணப்படுகின்றன. மேலும் தமிழரின் பண்பாட்டையும் சிறப்பையும் அறிந்து கொள்வதற்குக் கல்வெட்டுகளும் இலக்கியங்களும் துணை நிற்கின்றன. இருந்த போதிலும் தமிழரின் உண்மையான அடையாளம் என்பது எளிமையான அடித்தட்டு மக்களின் வாழ்வியல் முறை முறையே ஆகும். அதனைத் தன் ஆய்வின் மூலம் வெளியுலகத்திற்கு எடுத்து உரைத்தவர் பேராசிரியர் தொ. பரமசிவன் ஆவார் .இவர் மக்களை நேரடியாகச் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடி அதன் மூலம் பெற்ற செய்திகளைத் தன் ஆய்வு களமாக மாற்றி தமிழரின் பண்பாட்டு அடையாளங்களை மீட்டவர் . அவ்வகையில் தொ.பரமசிவன் அவர்களின் பண்பாட்டுச் சிந்தனைகளை ஆராய்வதே இவ்வாய்வு ஆகும்.

**பண்பாடு விளக்கம்**

பண்பாடு என்பதற்கு பண்+பாடு அதாவது பக்குவப்படுத்துதல் பண்பாடு ஆகும். “பண்பாடு என்னும் சொல் மனிதனோடு மட்டுமே தொடர்புடையது. இதுவே பிற உயிரினங்களிடமிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுகிறது. மனிதன் மட்டுமே பண்பாட்டைக் கொண்ட விலங்காவான் போன்ற கருத்துக்கள் பரவலாக பேசப்படுகின்றன”. (பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானுடவியல் பக். 149)

“பண்பாடு என்பது மக்கள் அனைவரும் கூட்டமாக சேர்ந்து செயல்படும் போது உண்டாகும் நடத்தை முறைகளின் சேர்மமாகும். இது அந்தந்த சமுதாயத்திற்கு மட்டுமே உரியது. இது உயிரியல் நிலையில் மரபுரிமையாக வராதது. பண்பாடு என்பது அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்பட்ட கருத்துக்களும் சமுதாய மரபு உரிமையாகப் பெறப்பட்ட நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் அடங்கிய தொகுப் பாகும்”. (மேலது ப.151)

பண்பாடு என்பது மக்களின் வாழ்வியலோடு தொடர்புடைய ஒன்றாகும். தமிழர் பண்பாடு என்பது அடித்தட்டு அல்லது சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் பண்பாட்டோடு தொடர்புடையதாகும். சாமானிய மக்களின் வாழ்வியல் முறைகளே ஒரு சமூகத்தின் தொன்மையான உண்மையான பண்பாட்டை எடுத்துரைப்பவனாகக் காணப்படும்.

தொ.பரமசிவன் பண்பாட்டுவியல் அணுகு முறை என்பது சாமானிய மக்களின் உணவு பழக்கவழக்கங்கள், உறவுமுறைகள், தெய்வ வழிபாடு, திருவிழாக்கள் பழக்கவழக்கங்கள் இவற்றின் வழியே வெளிப்படுகின்றது.

**தமிழர் உணவு முறைகள்**

பண்பாட்டின் ஓர் அங்கமாக இருப்பது உணவாகும். ஒரு குறிப்பிட்ட மக்களின் உணவு பழக்க வழக்கம் அவர்கள் வாழும் சூழ்நிலை பொறுத்தே அமைகின்றன. உணவு முறைகளை வைத்து மக்களின் வாழ்வியல் முறையை அளவிட முடியும்.

“ஒரு குறிப்பிட்ட மக்கள் சமூகத்தின் அசைவு இயக்கங்களை உணர அவர்தான் உணவு பழக்கவழக்கங்களைக் கூர்ந்து நோக்க வேண்டும். உணவுப் பழக்க வழக்கங்கள் ஒரு சமூகம் வாழும் பருவச் சூழ்நிலை, வாழ்நிலத்தின் விளைப்பொருட்கள், சமூகப் படிநிலைகள், உற்பத்திமுறை, பொருளாதார நிலை ஆகியவற்றைப் பொறுத்து அமையும்”. (தொ.பரமசிவன், அழகின் அசைவு, அறியப் படாத தமிழகம்) ப. 15)

உணவு என்பது மக்களின் அடையாளம். மக்களின் ஒட்டுமொத்த வாழ்வியல் கூறுகளை யும் உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. தொ.பரமசிவன் கருத்துக்கள் உணவு என்பது உடலை வளர்ப்பதற்கான அத்தியாவசியமான பொருள் என்பதையும் தாண்டி அது ஓர் இனக்குழுவின் அடையாளம் என்பதை எடுத்துரைக்கின்றார். உணவுப் பொருளைப் பக்குவப்படுத்துவதற்கு பல்வேறு சொற்களைத் தமிழர் பயன்படுத்துகின்றனர். சமைத்தல், அவித்தல், வேகவைத்தல், வறுத்தல், சுடுதல், வற்றல் ஆக்குதல், பொரித்தல், ஊற வைத் தால் போன்றவை சமையலைப் பக்குவப் படுத்துவதற்கான பல்வேறு முறைகளாகும்.

**சமைத்தல்**

சமைத்தல் என்ற சொல்லுக்கு பக்குவப் படுத்துதல் என்பது பொருள். "சமைத்தல் என்ற சொல்லுக்குப் ‘பக்குவப்படுத்துதல்’ என்பது பொருள் அடுப்பில் ஏற்றி சமைப்பது ‘அடுதல்’ எனப்படும். சமையல் செய்யப்படும் இடம் ‘அட்டில்’ அல்லது ‘அடுக்களை’ எனப்படும். தமிழர்களின் வீட்டு அமைப்பில் வீடு எந்த திசை நோக்கி அமைந்திருந்தா லும் சமையலறை வீட்டின் வடகிழக்கு அல்லது தென்மேற்கு மூலையில் அமைக்கப் படுகிறது” (தொ.பரமசிவன், பண்பாட்டு அசைவு ப.19). அடுக்களை வீட்டின் குறிப்பிட்ட இடத்தில் தான் அமையவேண்டும் தமிழரின் நம்பிக்கை சார்ந்த பண்பாடாக உள்ளது.

உணவின் முக்கிய சுவைப் பொருள் உப்பாகும். தமிழர் பண்பாட்டில் உப்புக்கு என்று தனி இடம் உண்டு. உப்பு வெறும் உணவோடு நின்றுவிடாமல், சில மங்கள நிகழ்வுகளிலும் முக்கியமானதாகக் கருதப் படுகின்றது. திருமணம் முடிந்து தன் கணவன் வீட்டிற்குச் செல்லும் பெண் சிறு ஓலைக்கூடையில் உப்பு எடுத்துச் செல்வது இன்றும் சில சாதி மக்களிடம் உள்ள பழக்கமாகும். மேலும் புதுமனைப் புகும் விழாவின்போது அரிசையும் உப்பையும் அன்பளிப்பாக உறவினர்கள் கொண்டு வந்து தரும் பழக்கமும் காணப்படுகிறது. இந்நிகழ் வினைத் தொ.ப அவர்கள், மதுரை மாவட்ட கள்ளர்களில் ஒரு பிரிவினர் திருமணத்தை உறுதி செய்யும்போது மணமகன் வீட்டிலிருந்து அரிசியும் உப்பும் கொண்டு செல்லும் நிகழ்வை எடுத்துக்காட்டி நமக்கு விளக்கிச் செல்கிறார்.

இறந்தவரின் வீட்டில் எட்டாவது அல்லது பத்தாவது நாளு நாட்களில் உணவு படைக்கும் போது, உணவில் உப்பு சேர்க்கும் வழக்கம் சில மக்களிடம் இல்லை. ஏனென்றால் இறந்தவரோடு அக்குடும்பம் கொண்ட உறவை அறுத்து விடுவதற்கான குறியீடாக (உப்பு இல்லாமல் சமைப்பது) உள்ளது.

‘உப்பிட்டவரை உள்ளளவும் நினை’ என்ற பழமொழி உப்பு நன்றி உணர்ச்சியின் குறியீடாகும் உள்ளது. பாஞ்சாலி சபதத்தில் பாரதி

> **“நன்றி கெட்ட விதுரா சிறிதும்**
> **நானமற்ற விதிரா**
> **தின்ற உப்பினுக்கே நாசம்**
> **தேடுகின்ற விதரா”** (மேலது ப.23)

என நம்பிக்கை அற்றத்தனத்தைப் பதிவு செய்துள்ளார். இப்பாடலின் வழி உப்பு நம்பிக்கையின் குறியீடாகும்.

**உறவுகள்**

திருமணம் என்பது ஒவ்வோர் இனக் குழுவிற்கும் மாறுபடும். இனக்குழுவின் நாகரீக வளர்ச்சிக்கு ஏற்ப சடங்கு முறைகள் வேறுபடும். திருமணத்திற்குப் பிறகு குடும்பம் என்ற அமைப்பு உருவாகிய பொழுது அதில் குடும்ப உறவுகள் இடம்பெற்றன.

"உறவுப் பெயர்கள் பொதுவாக விளிப் பெயர்களாகவே விளங்குகின்றன அம்மை, அப்பன், மாமன், அக்கன், தாத்தன், ஐயன் ஆகிய பெயர்கள் அம்மா, அப்பா, மாமா, அக்கா, தாத்தா, ஐயா எனவே வழங்கி வருகின்றன. இவற்றுள் அக்காவை குறிக்கும் அக்கன் என்ற பெயர் வழக்கு முற்றிலுமாக

மறைந்து போய்விட்டது. கல்வெட்டுகளில் மட்டும் காணப்படுகிறது. ‘அண்ணாழ்வி’ என்ற வழக்கு அண்ணன், அண்ணாவி என மாறிய வருகிறது” (தொ. பரமசிவன், பண்பாட்டின் வாழ்வியல் ப.131) இவ்வாறு பல உறவுப் பெயர்கள் நமது பண்பாட்டில் வழங்கப்படுகிறது.

தாத்தாவையும் பாட்டியும் குறிக்கும் சொல்லாக முத்தப்பன், முத்தம்மை என்ற சொற்கள் ஆளப்பட்டிருப்பதை கல்வெட்டு அறிஞர் வேதாசலம் எடுத்துக்காட்டுகிறார். இலக்கியங்களில் எந்தை, நுந்தை இலக்கியச் சொற்கள் தந்தையைக் குறிப்பதாகக் காணப் படுகின்றன. யாய், ஞாய் ஆகிய சொற்கள் தாயைக் குறிப்பதாகக் காணப்படுகின்றன. இச்சொற்கள் பேச்சு வழக்கில் தந்தை, தாய் என்று வழங்கப்படுகின்றன.

"பழங்குடி மக்களைப் பற்றி ஆராய்ந்த எல். அனந்தகிருஷ்ண ஐயர் தமிழகத்தின் தந்தை என்பதை ‘அந்தை’ என்றும் பெரியப்பாவை ‘வலியந்தை’ என்றும் அழைப்பதைக் கண்டு பிடித்துக் கூறியுள்ளார்." (மேலது ப. 133)

உறவுப்பெயர்கள் சாதிக்கு சாதி வேறு படுவது உண்டு. அவற்றில் மாமன், மாமி, நாத்துண் ,நங்கை என வழங்கும் சொற்கள் ஒரு குறிப்பிட்ட சாதிக்கு மட்டுமே உரியதாகக் கருதப்படுகின்றது. ‘அம்மான்’ என்னும் சொல் நாட்டுக்கோட்டை செட்டியாரிடம் வழங்கி வரும் சொல்லாகும். மேலும் அத்திம்பேர், அம்மாஞ்சி முதலிய உறவுப் பெயர்கள் பார்ப்பனர்கள் மட்டுமே பயன்படுத்தி வரும் சொற்களாகும். இதில் அத்திம்பேர் என்பது அத்தையின் மகனையும், அம்மாஞ்சி என்பது தாய் மாமன் மகனையும் குறிக்கும் சொல்லாக வழங்கிவருகின்றன. மைத்துனன், மைத்துனி என வழங்கும் உறவுப் பெயர்களும் தமிழில் உண்டு. இது கி.பி பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்த ராஜராஜன் கல்வெட்டுகளில் நன்மச்சுனன் என்று மைத்துனன் என்பது குறிக்கப்பட்டுள்ளது. திருவிதாங்கூர் பழங்குடி மக்களே சிலரும் மலையாளிகளும் மைத்துனன் என்பதற்கும் பதிலாக ‘அலியன்’ என்ற சொல்லைப் பயன்படுத்தி வருகின்றனர். இவ்வாறு தமிழ்ச் சமுகத்தில் உறவுப்பெயர்கள் காணப் படுகிறன. இது தமிழ் பண்பாட்டின் தனித்த அடையாளம் என்பதனை தன் ஆய்வின் மூலம் தொ.ப கூறியுள்ளார்.

### தெய்வ வழிபாடு

மனிதன் தன்னை மீறிய சக்தியினைக் கடவுளாக வழிபடத் தொடங்கினான். தொடக்கத்தில் இயற்கையை வணங்கினான். பின்னர் தன்னுடன் வாழ்ந்து இறந்தவர்களை வழிப்பட்டனர். இதுவே "இனக்குழு மக்களிடையே தான் தெய்வங்கள் பிறந்தன. நாளடைவில் தனி சொத்துரிமை வளர வளர உடலால் உழைப்பவர்கள் உடமையாளர்கள் என்ற பிரிவு சமூகத்தில் தோன்றிய போது பெருந் தெய்வங்கள் உடமையாளர்களின் தெய்வங்கள் ஆகிவிட்டனர். அவர்களுடைய பண்புகள் தெய்வங்களின் பண்புகள் ஆகிவிட்டன". (தொ.பரமசிவன், தெய்வங் களும் சமூக மரபுகளும் ப.13)

பெருந்தெய்வ வழிபாட்டில் பலியிடுதல், நேர்த்திக்கடன் போன்ற செயல்கள் இருக்காது. சிறுதெய்வ வழிபாடு என்பது கிராமப்புற தேவதைகள். இவை மக்களோடு இரண்டற கலந்தவை. மக்கள் தங்களுக்கு நேரும் துன்பங்களையும் மகிழ்ச்சிகளையும் தெய்வ வழிபாட்டில் வெளிப்படுத்தினர். கிராமத் தேவதைகள் கையில் ஆயுதம் ஏந்தியவைகளாக உள்ளன. ஏனெனில் மக்கள் அவற்றை காவல் தெய்வங்களாகக் கருதினர். அதனால் தான் காய்த்தல், கண்மாயிலிருந்து பாய்கின்ற நீரை காத்தல், விளைந்த பயிரை பகைவரிடம் இருந்து காத்தல், அறுவடை செய்த தானியங்களைக் காத்தல், உழவுக்கு வேண்டிய கால்நடை களைப் பகைவர்களிடமிருந்து காத்தல், ஊர் எல்லையில் நின்று எதிரிகளிடமிருந்து ஊரைக் காத்தல் இன்று மக்களோடு உறவாடும் தெய்வங்களாகச் சிறுதெய்வ வழிபாடு காணப்படுகின்றன.

பிராமணர் அல்லாதவர்கள் சிறுதெய்வ வழிபாட்டை மேற்கொண்டனர். நிலவுடமை சமுதாயத்தில் பிற எல்லா சாதியினரும் சிறு தெய்வ வழிபாட்டில் ஈடுபட்டனர். சிறுதெய்வ வழிபாட்டு கோயில்கள் மிகச் சிறியவை. சில இடங்களில் கட்டடம் இன்றியும் அமைகின் றன. மரங்கள் புதர்கள் போன்றவைகளையும் தெய்வங்களாக வழிபடப்படுகின்றன.

"வேம்பு, பனை, பூவரசு ஆகியவை மரங்கள் இருக்கும் பெண் தெய்வக் கோயில்கள் பெரும்பான்மை வடக்கு நோக்கியும், சிறுபான்மை கிழக்கு நோக்கியும், ஆண் தெய்வ கோயில்கள் கிழக்கு நோக்கிய அமைவதும் மரபாகும். சிறு தெய்வ கோவிலில் பெரும்பாலும் ஒரு தெய்வம் அல்லது மூன்றிலிருந்து 21 தெய்வங்கள் வரை வடக்கு, கிழக்கு தெற்கு நோக்கி அமைந்திருக்கும்" (மேலது ப.17)

### சிறுதெய்வப் பெயர்கள்

சிறுதெய்வப் பெயர்கள் பெரும் தெய்வங் களின் பெயர்கள் இருந்து வேறுபட்டு காணப்படுகின்றன. ஆண் தெய்வங்களை விட பெண் தெய்வங்களை மிகுதியாக உள்ளன. ஐயா, அப்பன், அடியான் சாமி, கருப்பன் இருளப்பன், பனடியான், கருப்ப

சாமி போன்றவை ஆகும். பெண் தெய்வப் பெயர்கள் அம்மன், நாச்சிக்கிழவி, முத்தாலம்மன், பெரியநாச்சி, அரியாக் கிழவி போன்றவை உள்ளன.

### சிறுதெய்வக் கோயில்கள் அமையும் இடங்கள்

சிறுதெய்வக் கோயில்கள் பொதுவாக ஊருக்கு எல்லையிலும் குளக்கரை, கண்மாய் கரை, களத்து மேடு, வாயில் புறம் நெடுஞ்சாலை களின் ஓரம், காவல் குரிய இடங்களில் எல்லாம் அமைந்திருக்கும். சிறு தெய்வங்கள் பெரும்பாலும் காவல் தெய்வங்களாகவே கருதப்படுகின்றன.

### சிறுதெய்வ உருவமைப்பு

சிறுதெய்வங்களில் பெண் தெய்வங்கள் பீடத்தின் மேல் அமர்ந்திருப்பது போலும் இரண்டு கைகளோடு தலையில் வெவ்வேறு வகையான மகுடங்கள் சூடி கையில் வேலு போன்றவை வைத்திருக்கும் காலில் கழுத்தில் பலவகையான அணிகலன்களை அணிந்து இருப்பதாகவும் அமைந்திருக்கும். பெண் தெய்வங்கள் இடுப்பில் குழந்தை வைத்தி ருப்பது போலவும், சில பெண் தெய்வங்கள் கையில் இடது கபாலம் வலது கையில் ஈட்டி இருப்பது போன்று அமைந்திருக்கும்.

ஆண் தெய்வங்கள் பெரும்பாலும் நின்ற கோலத்திலும் ஒரு சில தெய்வங்கள் மட்டும் காளையின்மீது முழங்காலிட்ட கோலத்திலும் காணப்படும். பெண் தெய்வங்கள் பெரும் பான்மையும் அமர்ந்த கோலத்தில் காணப் படும். சில தெய்வங்கள் அவற்றின் தோற்றத் தின் அடிப்படையில் நொண்டிச்சாமி, சப்பானியச் சாமி என அழைப்பதுண்டு. சிறுதெய்வங்கள் பெரும்பான்மை சுதைச் சிற்பங்களாக காணப்படும்.

சிறுதெய்வங்கள் நின்ற கோலத்திலும் காணப் படுவதுண்டு. நெல்லை மாவட்டத்தில் மேற் பகுதியில் குமரிமாவட்டத்தில் சில பகுதிகளி லும் மலைச்சியம்மன் பெயர் கொண்ட தெய்வம் ஆணும் பெண்ணும் ஆக மிகப் பெரிய உருவமாக கிடந்த நிலையில் காணப்படுகிறது.

### திருவிழாக்கள்

திருவிழாக்கள் என்பது மக்கள் தங்களை புதுப்பித்துக் கொள்வதற்காகக் கொண்டாடப் படுவது ஆகும். திருவிழா என்ற சொல்லுக்கு ஆழமான பொருளைத் தருகிறார் தொ.ப.

"திருவிழா என்பது ஒரு சமூக இளைப் பாறுதல் நிகழ்வாகும். ஆடுதல், பாடுதல், கூடிக்களித்தல், கூடி உண்ணுதல் ஆகிய அசைவுகளும் தொடர்ந்து வரும் அவற்றின் இணைவுகளும் ஒரு சமூகத்தைச் சோர்வின்றி இயங்கச் செய்கின்றன. இதுவே திருவிழாவின் பொருள் என்று கொள்ளலாம்" (தொ.பரம சிவன், பண்பாட்டின் வாழ்வியல் ப.39) என்கிறார். அனைத்து சமய மக்களாலும் கொண்டாடப்படும் திருவிழாக்கள் உள்ளன. குறிப்பாக இந்துக்கள் கொண்டாடும் திரு விழாக்களில் சடங்குகள் முன்னிறுத்தியை கொண்டாடப்படுகிறது.

"ஊர், சாதி, சடங்குகள், தெய்வங்கள் ஆகிய அளவுக்கோல்களை முன்னிறுத்தி நடைபெறும் திருவிழாக்களை பொதுவாக நாம் திரு விழாக்கள் என்று ஏற்றுக் கொள்கி றோம்." (மேலது, ப. 39). திருவிழாக்கள் தமிழரின் பண்பாட்டில் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

### முடிவுரை

தமிழர் பண்பாடு என்பது பல்வேறு பண்பாட்டுக் கூறுகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாகத் தமிழரின் உணவுமுறை பண்பாட்டில் முக்கியமானதாகும். உறவுகள் என்பது தமிழ் சமூகத்தில் காணப்படும் அடையாள குறியீடாகும். தமிழர் மக்களுக்கே உரிய வழிபாடு சிறு தெய்வ வழிபாடு ஆகும். தொ. பரமசிவன் அவர்கள் தமிழர்களின் பண்பாட்டை பல்வேறு பணிகளை ஆய்வு செய்துள்ளார். மிகவும் குறிப்பாக சாமானிய மக்களின் உணவு பழக்க வழக்கங்கள் உறவுமுறைகள் தெய்வ வழிபாடு இவற்றின் வழியே தமிழ் பண்பாடை மேற்கண்ட ஆய்வுகளின் வழி விரிவாக அறிந்து கொள்ள முடிகின்றது.

### துணைநூற் பட்டியல்

1. தொ.பரமசிவன், **பண்பாட்டு அசைவுகள்,** முதல் பதிப்பு 2001, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்
2. தொ.பரமசிவன், **பண்பாட்டின் வாழ்வியல்,** இரண்டாம்பதிப்பு செப்டம்பர் 2023, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை
3. தொ.பரமசிவன், **தெய்வங்களும் சமூக மரபுகளும்**, முதல் பதிப்பு பிப்ரவரி 2022, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்
4. தொ.பரமசிவன், அழகின் அசைவு, பிப்ரவரி 2022, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்
5. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், திருத்திய பதிப்பு மே 2016, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்